
சுயராஜ்ய பேரிகை, மலர்—7 (புதிய பதிப்பு)

நாமார்க்கும் குடியல்லோம்! நமனை யஞ்சோம்!!

ஸ்ரீ

ஸர்தார் படேல்



எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்
எழுதியது

சுயராஜ்ய பேரிகை, மலர்-7

நாமார்க்கும் குடியல்லோம்! நமனையஞ்சோம்!!

ஸ்ரீ

வேளிர் வீரதிலகன் ஸர்தார் படேல்

1. முன்னுரை

மகத்தான பெரும் போர் சின்னாளிலே மூளும்; அத்தகைய மகாயுத்தத்தை இன்றளவும் பாருலகம் அறிந்திராது. அஃதோ முதன்முதல் கூர்ஜரத்தில்தான் கிளம்பும். அதன் பலாபலன் மிகவும் பிரமாதமாக இருக்கும். ஆதலின், சாவுக்கு அஞ்சுவோர் தேசத்தைத் துறந்து, தீர்த்த யாத்திரை செல்வாராக! ஆஸ்தி போய்விடுமே என்று அழுவோர் அயலகம் சென்றுவிடுதலே மேலாம். மெய்யான குச்சிலியர் கை கட்டி வீட்டுக்குள்ளே குந்தியிருத்தல் ஒண்ணாது; மற்று, போரிலே முன்னணியில் குதித்து மார்தட்டி நிற்றல் வேண்டும்."

இவ்விதம் ஒருவர்சென்ற 1930-ஆம் வருஷம் கர்ஜனை செய்தார். நாள் பொய்த்தாலும் நல்லோரின் வாக்கு பொய்க்காது. காந்தி மகான் உப்புச் சண்டைபோட ஒரு சிலருடன் புறப்பட்டார். அரசாங்கம் அதுகண்டு அலட்சியமாக இருந்தது. பாரத புத்திரரிலும் பலர், ஈதென்ன கிழவன் கூத்து, என்று இலேசாக எண்ணிக் கிடந்தனர். முன்னவனே முன்னின்று நடத்துகின்றான், என் செயலால் ஆவது யாதொன்றும் இல்லை, என்று கூறிச் சென்

ளூர் காந்தியடிகள். காலசக்கரம் சுழலுங்காலையில் அதனை யாவரே தடுக்க வல்லார்? உப்புச் சண்டையோ சண்ட மாருதம்போல் நம் பரத கண்டமெங்கும் பரவலாயிற்று; அதன்மேல், மதிமோசம் போனேமே என்று அதிகார வர்க்கம் வருந்திச் சீறியெழ நேர்ந்தது.

பாரத மக்களோ புற்றீசல்போல் கிளம்பி, போர் முனையிலே குதித்தார்கள்; இளம்பெண்டிரும் பச்சைப் பாலரும் அருஞ் சமரில் ஆவிகொடுக்கவும் முன்வந்தனர். அரசாங்கம் அதுகண்டு ஒன்றன்பின் ஒன்றாக அவசரச் சட்டம் பல இயற்றி, ஆர்ப்பாட்டம் செய்தது; தடியடிப் பிரயோகத்திலும் தலைகால் தெரியாமல் இறங்கிற்று. மானிடரின் உடல் வலியை ஒடுக்க இயலும், உள்ளத்தின் உரத்தைக் குலைக்கவும் கூடுமோ? "இந்தியாவிலே ஆங்கில ஆட்சி நடப்பதா, இல்லையா? நமது பல்வகைப் படை பலம் எங்கே போயிற்று?", என்று இங்கிலாந்து தேசத் திலே சிலர் இடிமுழக்கம் செய்தனர். பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்தின் பிரதானியாக விளங்கும் மக்டோனல்டு என் பார் அதுகேட்டுத் திகைத்துப் போனார்; முடிவில் அவர் "நான் என்ன செய்வேன்? படைபலம் நம்மிடம் இருத்தல் உண்மையே. அதனை நாம் கையாளுவதாயின், வடக்கே இமயம் முதல் தெற்கே குமரி வரையில் ஆங்கிலப்படை களை அணிவகுத்து நடத்திச் சென்று, இளம் மாதரையும் பால்மணம்மாறாப் பாலரையும் சுட்டுவீழ்த்தல் வேண்டும். இவ்விதம் கொன்று குவிக்க உத்தரவு உண்டா?" என்று கலங்கிக் கூறினர். அப்பால் அக் "கிழவ"னிடம் ஆங்கில அரசாங்கம் விதியின்றி ராஜிக்கு வந்தது. உலகமும் அது கண்டு ஓரளவு ஆறுதல் கொண்டது.

சோதிடம் புகல்வதுபோல் கர்ஜனை புரிந்த அப்பெரு யான் பெயர் வல்லபபாய் படேல். அவரது வீரவாச கத்தை ஆயிரத்து ஐந்நூறு அமெரிக்கப் பத்திரிகைகள்

ஆர்வமுடன் பிரசுரித்தன. அவ் வீரபுருஷன் இந்த ஆண்டில் தேசிய வேந்தனுக விளங்குகின்றார். அங்ஙனம் வரும் பொருள் உரைத்த வல்லபபாய் அவ்வேளை வாளா இருக்கவில்லை; கூர்ஜரத்திலே போருக்கு உரிய முஸ்தீப்புக்கள் அனைத்தும் சேகரிக்கலானர்; அதிகார வர்க்கம் வாளா இருக்குமோ? அடக்குமுறை எனும் அஸ்திரம் சீறிவரலாயிற்று. வரவே, அப்போரில் முதன் முதல் களப்பலி ஆகும் பெருமை பெற்றார் நமது வல்லபபாய். அவரது வாழ்க்கைச் சரிதம் வெகு வியப்பும் மிக ஊக்கமும் ஊட்டா நிற்கும். ஆதலின் அச் சரிதத்தை இந்நூலில் சுருங்கச் சொல்வோம்.

2. பெரியார் பெருமை

அரசர் என்போர் தமது சதுரங்க சேனை கொண்டு ஆணை செலுத்தி அவனியை ஆளுவர். அச் சேனையும் ஆணையும் கணப்பொழுதில் மறையக்கூடும்; தவிர அரையில் உடுத்திய ஆடையே அரவமாக மாறித் தீண்டுவது போல், அச்சேனையும் ஆணையும் சேர்ந்து, அவனி காவலரைச் சீறிச் சிதைப்பதும் உண்டு. நெருப்பாற்றை மயிர்ப்பாலங் கட்டிக் கடப்பதுபோலாகும் இக்காலத்திய அரசவாழ்வு. கணப்பொழுதேனும் கவலையின்றி வாழ அக்காவலர் பாக்கியம் படைத்திரார். இங்ஙிலையில் சிலர் உலகத்தைக் கட்டியாள, மற்றுஞ்சிலரோ ஆயுதம் எதுவும் இன்றி, அன்பு என்னும் அரிய சாதனங் கொண்டு, மக்களின் மனத்தைப் பிணித்து, மானிடகோடிகளை மகிமையுடன் ஆண்டுவருவர். அத்தகைய பெரியாரின் ஒரு சொல் கண்டு, அவனி காவலர் கதிகலங்கவும், முடியிழக்கவும், அரசு துறக்கவும் நேரும். இறைவன் ஆணை ஓர் எல்லைக்குள் தான் செல்லாநிற்கும். பெரியாரின் திருவாக்கு எனும் ஆணையோ கருணைவடிவாகக் கிளம்பி, காசினி

யெங்கும் பரவி, அனைவருக்கும் கதிமோட்சம் தேடித் தரும். தற்காலம் இத்தகைய மாபுருஷனாகத் துலங்குவது மகாத்மா காந்தியேயாம். அப்புனித புருஷனுக்கு வலது கரம்போல் விளங்குகிறார் வல்லபபாய் படேல். மகாத்மாவின் கருணை நோக்கில் அவர் ஈடுபட்டு, சத்தியாக்கிரகப் போர்த் தலைவனாகி ஏறக்குறைய பத்தாண்டுகளே ஆகின்றன. வல்லபபாய் ஈடுபட்ட விதமோ மிக விநோதமாம்.

ஒரு சமயம் காந்தி மகான் தேசப்பணியின் நிமித்தம் சில அன்பரைக் காணச் சென்றார். அவ்வேளையிலே அந்த அன்பரும் பிறரும் சீட்டாட்டம், சதுரங்க விளையாட்டு இவற்றில் மூழ்ந்து கிடந்தனர். காந்தி மகான் வருகை கண்டு, பலரும் விளையாட்டை விடுத்து, பயபக்தி விசுவாசத்துடன் எழுந்து நிற்கலாயினர். வல்லபபாய் படேலோ அதுகண்டு அருவருப்புக்கொண்டு, "அவன் கிடக்கான், நாம் நமது ஆட்டத்தைக் கவனிப்போம்", என்று கூறினார். அச்சொல் காந்தியின் காதில் வீழ்ந்தது. புகழ்ச்சியும் இகழ்ச்சியும் பாராட்டாத அப்பெருமான் தமது அன்பரை நோக்கி, "நல்லது! அவர் ஆடிக்கொண்டிருக்கட்டும், ஆட்டத்திற்கு யாதோர் இடையூறும் நேரவேண்டாம். நமது காரியத்தை நாம் கவனிப்போம்," என்று பொருள் படும்வண்ணம் புகன்று போனார். பள்ளத்தில் நீர்பாய்ந்து நிற்பதேபோல், காந்தியின் வார்த்தை வல்லபபாயின் உள்ளத்தில் புகுந்து உணர்ச்சி ஊட்டலாயிற்று. காந்தியின் வார்த்தையை அவர் பன்முறை எண்ணிப்பார்த்தார்; பரம சிந்தனையும் செய்தார்; முடிவிலே பரவசமும் கொண்டார். அதுமுதல் காந்தியின் காந்தவலையில் அவர் ஈடுபடலானார். உடனே இணையிலாச் சிறப்பும் எய்தினார்.

"ஆதியிலே யான் ஆடை அணிகளில் ஆவல் உள்ளவனாய், அலங்காரப் பிரியனாய், சுகவாச துரந்தரனாய்க் காலங் கழித்துவந்தேன். வருவாய் மிகத் தரும் வக்கீல்

தொழிலிலும் சிரத்தை கொள்ளாமல், சீட்டாட்டத்திலும் சதுரங்க விளையாட்டிலும் மூழ்கிக் கிடக்கலானேன். ராஜீயக் கிளர்ச்சி கண்டு, எனக்கு அலுப்பும் சலிப்பும் ஏற்பட்டிருந்தன. ராஜீய வேலை என்றால், அது ஒரு சின்னத்தனம், அன்றியும் அஃது பொய்வேஷக் கூத்து என்றும் எண்ணிக் கிடந்தேன், அவ்விதம் நான் கிடந்தகாலையில் காந்தி மகான் என் கண்முன்னே தோன்றினார், காட்சி தந்தார், என் கண்ணைத் திறந்துவிட்டார், நல்வழியும் காட்டினார். அவரது உடல் தோற்றமும் ஊக்கத்தின் வேகமும் உள்ளத்தின் உயர்வும் கண்டு, நான் சொக்கிப் போனேன். பின்னரோ யான் புதிய மனிதனாக மாறி, அப்பெரியாரின் பக்தகோடிகளில் ஒருவனானேன்'', என்று வல்லபபாய் படேல் ஒரு சமயம் வாய்விட்டுச் சொல்லியிருக்கிறார். மகான்களின் கண்ணொளி பட்டவளவில் கொடிய கானகவிலங்குகளும் இயற்கைத் தீக்குணம் விடுத்து மகிமை பெறுகின்றன என்றால், ஆறறிவு படைத்த மானிடரைப்பற்றி அதிகம் சொல்லவேண்டுமோ? அலங்காரம், டம்பம், சுகபோகம் முதலியன எல்லாம் அதுமுதல் அவரைவிட்டு அகன்று போயின. அடக்கம், அன்பு, ஆர்வம் முதலிய அருங்குணங்கள் அவரைத் தேடியடைந்தன. படாடோபத்தில் பற்றில்லாத படேல் பெருமான் பிரசங்க மேடைகளில் தோன்றிப் பெருமை நாடாமல், காங்கிரஸ் நிர்மாண வேலையில் கண்ணும் கருத்தும் கொள்ளலானார்.

3. உயிர் நிலை

பாரத பூமியிலே ஏழுலட்சம் கிராமங்கள் உள. பாரதியின் உயிர்நிலை கிராமத்தில்தான் இருக்கின்றது. இந்தியாவில் நகரங்களோ மிகக் கொஞ்சம். நகரவாசிகள் நவநாகரிகத்தில் ஈடுபட்டு நாள்தோறும் அல்லல் உறுவர். நாட்டுப்புறத்தினரோ அந் நாகரிகத்தில் பட்டுழலாமல்,

பாரமார்த்திகப் பான்மையுடன் துலங்குவர். சத்தியமும் சன்மார்க்கமும் கிராமங்களிலேயே குடிகொண்டுள. சீட்டும் நாட்டும் கிராமத்தாருக்குத் தேவை இல்லை. சொல்லும் சொல்லே அவர்களுக்குப் பிரதானம். வாழ்வுவந்த காலத்திலும், தாழ்வுநேர்ந்த சமயத்திலும், ஆண்டவனை நம்பியிருத்தல் கிராமவாசிகளின் குணவிசேஷம். கிராம வாசம் கண்ணிய வாசமாம். நகரவாசமோ நரகவாசமாகும். கிராமங்களே அரசிறைக்கு ஓர் அஸ்திவாரமாக இருப்பவை, விழுமிய விவசாயமே கிராமத்தாரின் முக்கிய தொழில். வேளாளரிடமே கருணையும் கண்ணியமும் விளங்கி நிற்கும். ஆனதுபற்றி, எந்நாளும் இனிது காப்பரே வேளாளர் காண் என்று கவியரசர் கம்பரும் கூறிப் போனார். ராஜீயவாதிகளில் பலரும், கிராமங்களின் உயர்நிலையை உன்னுவதில்லை. கிராமத்தார் என்றால் சிலருக்கு ஓர் அருவருப்பும் உதித்து ஓங்கும். காந்திமகானுக்கோ கிராமத்தாரின் நலத்தில்தான் கண்ணும் கருத்தும் உண்டு. தேசம் உயரவேண்டும் என்றால், கிராமங்கள் உயரவேண்டும் என்பார் நம் காந்தியடிகள்.

ஔவைப் பிராட்டியார் ஒருசமயம் சோழ வேந்தனை வாழ்த்துகையில், வரப்புயர என்று கூறினர். அதன் கருத்தை அரசனும் அறியவில்லை; ஏனையோரும் உணரவில்லை. அதுகண்டு, "வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடி உயரக் கோல் உயரும், கோல் உயரக் கோன் உயர்வான்", என்று அப்பிராட்டி கூறிமுடித்தனள். பின்னரே சபையார் அனைவரும் உண்மைகண்டு உவகைகொண்டனர். இந்த உண்மையை மகாத்மாவிடமிருந்து வல்லபபாய் கண்டுகொண்டார். அவ்வளவுதான் தாமதம். உடனே அவர் கிராம விவசாயிகளின் நலத்தைப் பெருக்கும் வழியில் நாட்டம்வைத்தார்; அன்னவரைக் கைதூக்கிவிட அல்லும் பகலும் ஆர்வமுடன்

பாடுபடலானர். இவ்விஷயத்திலே ஓர் அம்சத்தில் காந்தியைவிட வல்லபபாய் படேல் பாக்கியம் படைத்தவர். நம் வல்லபபாய் படேலின் தந்தை ஒரு பெரிய விவசாயி. தந்தை தனது மைந்தனை இளமையிலே தன்னுடன் கழனிக் காடுகளுக்கு அழைத்துச் செல்வதுண்டு. அப்போது மனக்கணக்குப் போட்டு, தனது புதல்வனை அவர் பழக்கி வந்தார். வயல்காடுகளுக்குப் போகையிலும், அங்கிருந்து திரும்புகையிலும், விவசாயிகளின் நெருங்கிய பழக்கம் படேலுக்கு ஏற்படலாயிற்று. அதுமுதலே கூரிய மதி கொண்டு வேளாளரின் நிலையையும் உழைப்பையும் வல்லபபாய் படேல் கவனிக்கலானர். அதனுல் விவசாயிகளின் வாழ்க்கையில் அவருக்கு விருப்பம் பெருகிற்று, சிரத்தை ஓங்கிற்று, சிந்தையும் ஊடுருவிச் செல்லா நின்றது.

விவசாயம் இன்றேல், விளைபொருள் இல்லை; விளைபொருள் இன்றேல், தொழிலும் இல்லை, வாணிபமும் இல்லை. வாணிபம் இன்றேல், பணப்பெருக்கம் இல்லை. ஆதலின் விவசாயமே எதற்கும் தாயகம்; விவசாயிகளே தேசச்செழுமைக்கு மூலபலம் ஆவர். ஆயினும் இந்தியாவின் நிலைமை என்ன? விவசாயம் தத்தளிக்கின்றது, விவசாயிகளும் திகைக்கின்றனர். நிலவரிச்சுமையோ ஒட்டையின் முதுகையும் ஒடித்துவிடும். விவசாயிகளின் முதுகு ஒடியக் கேட்கவேண்டுமோ? உழவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது என்பர். ஆங்கில ஆட்சி முறையில் உழவரின் நிலைமை அஃதேயாம். ஓதுவார் எல்லாம் உழுவான் தலைக்கடை எனும் காலம் மலையேறிப் போய்விட்டது. உழவர் ஓலமிட்டும் என்ன? குறை கேட்பார் யார்? தீர்ப்பார் யார்? நிலவரிச்சட்டம் என்ற பட்டம் உளது. அஃதோ அதிகாரிகள் இழுத்தபடியெல்லாம் இழுபடும். இது அடாது என்று அன்றுமுதல் நேற்றுவரையில் அலறினோர் பலர், ஆர்த்து எழுந்தோர்

பலர்; சட்டசபையில் சொல்மாரி பொழிந்தோரும் பலர். தேன் சொட்ட அதிகாரிகள் பேசியதும் அனந்தம். ஆயினும் விவசாயிகளின் குறையும் முறையும் தீர்ந்தனவோ? இல்லை! இல்லை!! குறைதீரவில்லை எனும் குறையைப் போக்கிய பெருமை வல்லபபாய் படேலுக்கே உண்டு. கூர்ஜர விவசாயிகளின் பங்காளனாக அவர் முன்னின்று மொய்யமர் முறுக்கிய மேன்மை மூவுலகும் அறியும். அப்போரின் விவரத்தை இங்கே ஓரளவு உரைத்தல்வேண்டும்.

4. வாழ்வளிக்கும் வள்ளல்

வல்லபபாய் படேல் விளம்பிய வண்ணம், போன வருஷம் கூர்ஜரத்தில்தான் முதன்முதல் போர்முரசு கொட்டப்பட்டது. தவிர, 1920-ம் ஆண்டிலும் அக் கூர்ஜரத்தைத்தான் போர்க்களமாகக் கொள்ள மகாத்மா காந்தி கருதினர். இதன் காரணத்தை ஆராய்தல் அவசியம். பாரதபூமியின் பழமையான ஐம்பத்தாறு தேசங்களில் சிறந்தொன்று கூர்ஜரம். ஆதிகாலந் தொட்டு, தேச சரிதத்தில் கூர்ஜரம் பேர்பெற்றதாம். பல சமயங்களில் கூர்ஜரம் ஓர் அமர்க்களமாகவே விளங்காநின்றது.

முன்னம் பல்வளமும் நிரம்பிநின்ற பாரததேசம் தற்சமயம் பரமதரித்திர நிலைக்கு ஆளாகிக்கிடக்கின்றது. ஆதலின் இங்கே வயிறு வளர்க்க வகையின்றி நம்மவரில் பலர் தென் ஆபிரிக்காவுக்குப் போயுளர். அங்ஙனம் சென்றவர்களில் குச்சிலியரும் தமிழருமே அதிகம். தென் ஆபிரிக்கா வெள்ளையரின் கொடுமை கண்டு, காந்தி மகான் அங்கே சத்தியாக்கிரகப் போர் தொடுக்க நேர்ந்தது. போரில் மார்தட்டி நின்றோர் குச்சிலியரும் தமிழருமே ஆவர். அப்போது அவ்விருவரின் திறத்தையும் உரத்தையும் காந்திமகான் காணலானர். தென் ஆபிரிக்காவிலிருந்து இங்கே திரும்பி வந்ததும், கூர்ஜரமே மோகன

தாஸரின் வாசஸ்தலம் ஆயிற்று. அன்றுமுதல் அக்கூர்ஜரத்தை ஒழுங்குபடுத்தி உருப்படுத்த அப்பெரியார் முயன்று வந்தார். கூர்ஜரவாசிகளின் மனவலியில் காந்தியடிகளுக்கு நம்பிக்கை மிகவும் அதிகம்.

அன்று நடந்த சத்தியாக்கிரகப்போரிலும்சரி, நேற்று நிகழ்ந்த சத்தியச் சமரிலும் சரி, கூர்ஜரமே குவலயம் புகழ நடந்துகொண்டது. கூர்ஜரத்திலே தேசிய பாடசாலை இல்லாத நகரமோ கிராமமோ கிடையாது. அந்நாட்டினரின் கதர் அபிமானம் கொஞ்சம் அன்று. வடக்கே பனிவரை முதல் தெற்கே குமரியாறு வரையில் காங்கிரஸ் நிர்மாண வேலையை நன்கு இயற்றி நலம் பெற்ற நாடு கூர்ஜரந்தான். சத்தியாக்கிரகவழியில் தேசீயமணம் வீசத் தொடங்கிய நாடும் கூர்ஜரமே. காந்தியின் ஆணைகேட்டுத் தீயில் குதிக்கவும் தயங்காமல் நிற்போர் குச்சிலியரே ஆவர். இவ்விதம் கூர்ஜரத்தை ஆக்கிய பெருமை முதன் முதல் காந்தியைச் சாரும். அடுத்தபடியாக அப்பெருமைக்குப் பாத்திரம் ஆவோர் மகன்லால்காந்தியும் வல்லபபாய் படேலுமே. கொண்டவனது பலம், இன்றேல் கூரை ஏறிச் சண்டைபோட முடியாது. ஆங்குள்ள தொண்டர்களின் ஊழியமும் தியாகமும் உரைக்கும் தரம் அல்ல. குச்சிலியர் மகா சத்திய சந்தர்; ஈசுவர நம்பிக்கையில் இணையற்றோர்; சொன்ன சொல்லிலிருந்து அன்னார் இம்மியளவும் தவறார். அன்னவர்கொண்டுள்ள ஜாதிக்கட்டுப்பாடு போற்றத்தக்கது. குச்சிலியர் கோர்ட்டு ஏறி வழக்காடுதல் மிக அருமை. அவர்களிடம் குற்றம் குறைகளும் கம்மி.

ஆங்கில ஆட்சியின் ஆரம்பகாலத்திலே குச்சிலியர் கோழைகளாகக் கிடக்கலாயினர். அன்னவரின் அயலகத்தாரான மகாராஷ்டிரரோ இயற்கையிலேயே பெருவீரம் படைத்தோர்; முன்னம் ஒருசமயம் மொகலாய வல்லரசை மகாராஷ்டிரர் ஆட்டிவைத்தனர்; ஆரம்பகாலத்தில் ஆங்

கில அரசையும் அலமரச் செய்தனர். ஆதலின் கூர்ஜர வாசிகளைக்கண்டு மகாராஷ்டிரர் மதிப்புக்கொள்வதில்லை, கோழைகள் என்றும், குனிந்து கொடுப்போர் என்றும், அன்னவரை மகாராஷ்டிரர் எள்ளி நகையாடுவது உண்டு. அத்தகைய குச்சிலியர் சத்தியாக்கிரகப் போர்வீரரில் தலை சிறந்தோராக விளங்கிநிற்பதற்கு, காந்தியின் போதம் பசுமரத்தாணிபோல் பதிந்ததே காரணமாம். இன்றும் நாளையும் போரில் தலைகொடுக்க வேண்டின், குச்சிலியரையே மகாத்மா காந்தி பெரிதும் நம்பியிருக்கிறார். அந்நாட்டில் காந்தி மகானே கண்கண்டதெய்வம். வல்லபபாய் படேல் வாழ்வளிக்க வந்த வள்ளலாக விளங்குகின்றார். அரிய ஆலோசனையோ, பெரிய உதவியோ நாடிவருவோருக்கு வல்லபபாயைச் சுட்டிக்காட்டுதலே காந்தியின் வழக்கம். அரசாங்க ஆணையினும் வல்லபபாயின் ஆணையையே குச்சிலியர் பெரிதாக மதிப்பர். படேல் அத்துணை உயர் பதம் எய்திய காரணம் யாது?

5 வேளாளர் தவிப்பு

இந்தியா தேசம் நம்முடையது; நாம் பலவகையான வரி செலுத்துகின்றோம்; அந்த வரி வருமானத்தைக் கொண்டே, அரசியல் நடைபெறுகின்றது; இராஜப்பிரதிநிதி முதல் கிராமவெட்டியான் வரையில் அனைவரும் வாங்கிப் புசிக்கும் சம்பளம் நாம் கொடுக்கும் வரிப்பணத்திலிருந்து செலவாகின்றது. இத்தேசத்தில் உள்ள ரயில், தந்தி, தபால், ரஸ்தா முதலியன எல்லாம் நமது வரிப் பணத்தின் வலியினால் தோன்றியவை. இந்த உண்மையைச் சிலர் உணர்வதில்லை. “இந்திய பூமியை இங்கிலாந்திலிருந்து கப்பலில் கொணர்ந்து இங்கேவைத்துளர், அன்னிய அரசின் தயவால் நாம் ஏதோ வாழ்ந்து வருகிறோம்” என்று அச்சிலர் நம்பிக் கிடக்கின்றனர். “நாடு நமது

என்பது அறிந்தோம்" என்று பாரதியார் பறை சாற்றியும் என்ன? சிலருடைய மூளையில் அடிமைப்புத்தி அத்துணை தூரம் வேரூன்றிவிட்டது. அது என்று தொலையுமோ அகிலம்வல்ல ஆண்டவனே அறிவான்.

இங்கிலையில், "பூமியோ அரசாங்கத்துக்குச் சொந்தம்; அரசின் அரிய ஆஸ்திகளில் அஃது ஒன்றாகும், அதன் வருமானத்தைக்கொண்டே அரசியலை நடத்தவேண்டும்" என்று அதிகார வர்க்கம் சாதிப்பதில் ஆச்சரியம் உண்டோ! இத்தகைய வாதத்தின் முடிவுப் பொருள் என்னாகும்? வேண்டுமளவு அரசாங்கம் நிலவரி விதிக்கலாம்; நிலவரியில் கொஞ்சம் தொகை பாக்கியிருந்தாலும் ஆயிரக்கணக்கான விலையுள்ள நிலங்களை அரசாங்கம் பறிமுதல் செய்யலாம், மறுபைசலில் நிலவரியை அதிகாரிகள் உயர்த்தின், விவசாயிகள் கோர்ட்டுக்குச் சென்று நியாயம் தேட இயலாது; சட்டசபையும் அரசாங்கத்தின் தீர்மானத்தைப் புரட்டிப் போடுவதற்கில்லை. ஏன்? பூமிக்குச் சொந்தக்காரர் அரசாங்கத்தார், விதிக்கப்பட்ட வரியை மிராசுதாரர் கொடுத்தே தீரவேண்டும். உள்ள நிலை இஃதே!

இப்பூமியிலே சில பிரதேசங்களில்தான் சாசுவத நிலத்தீர்வை ஏற்பட்டுளது; பிற பிரதேசங்களிலோ குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை நிலத்தீர்வை அநுமாரின் வால்போல் வளர்ந்துகொண்டே போகின்றது. மிராசுதாரர்களே இதனை நன்கு அறிவர். வரி கொடுக்க வகை இல்லையே என்று வாடி வதங்கும் மிராசுதாரர்களின் தொகையோ நாளுக்கு நாள் காட்டு வெள்ளம்போல் பெருகிக்கொண்டே இருக்கின்றது. விவசாயத்தையே பெரிதும் நம்பியுள்ள இந்தியா தேசம் ஏங்கித் தவிக்கின்றது.

1919-ஆம் ஆண்டில் மாண்டேகு சேம்ஸ்போர்டு சீர்திருத்தம் ஏற்பட்டதல்லவா; நிலவரியை உயர்த்தும் விஷயம் விரைவில் சட்ட பூர்வமாக ஏற்படல்வேண்டும் என்று

அப்போதே பார்லிமெண்டு க்மிட்டியார் சிபார்சு செய்த னர். "அவ்விதமே சட்ட பூர்வமாக ஏற்படுவதற்குரிய வகை துறைகளை ஆராய்ந்து அறிய ஒரு கமிட்டியை நிய மிக்கவேண்டும். அக்கமிட்டியாரின் பரிசீலனை வெளியா கும் வரையில் நில வரியை உயர்த்தக்கூடாது," என்று பம்பாய் மாகாண சட்டசபையில் 1924 - ஆம் ஆண்டி லேயே ஒரு தீர்மானம் நிறைவேறியது. அத்தீர்மானத் திற்கு இணங்க, நிலவரி உயர்வைப் பரிசீலனைசெய்ய ஒரு கமிட்டியைமட்டும் அரசாங்கத்தார் நியமித்தனர். ஆயி னும் மறு பைசல் நடந்துகொண்டே வரலாயிற்று. அத னால் நிலவரி உயர்ந்துகொண்டே போயிற்று. அக்கமிட்டி யின் சிபார்சுகள் கவனிக்கப்படவில்லை. சம்பிரதாயமான முறைகளை எல்லாம் விவசாயிகள் கையாண்டு பார்த்தனர்; ஒன்றிலும் பலன் கிட்டவில்லை. அதனால் மிகவும் கஷ்ட நஷ்டம் அடைந்தோர் சூரத் ஜில்லாவைச்சேர்ந்த பார் டோலி தாலுகா வாசிகளே. வேறு வகை இல்லாமல் போகவே, பார்டோலி விவசாயிகள் வரிகொடா இயக்கத் தில் இறங்க நேர்ந்தது. அந்த இயக்கத்தின் தலைமைவகி த்து நடத்தியவர் வல்லபபாய் படேல். இயக்கத்தில் இற ங்குமுன், இறுதியாக அரசாங்கத்துக்கு அவர் ஒரு கடிதம் விடுத்தார். "நிலவரி உயர்வு அநீதம் என்பதே ஜனங் களின் கட்சி, மறுபைசல் அதிகாரியின் சிபார்சை மதித்து வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆதலால் பாரபட்சமற்ற ஒரு கமிட்டியை நியமித்து வரி உயர்வு அடுக்குமா என்று ஆராய வேண்டும், அவ்விதம் ஆராயாமல் போனால் வரி கொடாமையை மேற்கொள்ள நேரும்", என்பதே அக் கடிதத்தின் சாரம். அரசாங்க யந்திரம் அக்கடிதம் கண்டு இம்மியும் அசையவில்லை. படேலோ மக்களின் பக்கபலங் கொண்டு அதனை அசைத்து வழிக்குக் கொணர்ந்தார்; ஏழை விவசாய மக்களுக்கு ஆறுதலும் அளித்தார்.

6. மனவலியின் மகிமை

வல்லபபாயோ வழக்கறிஞர், உலகஞானமும் அனுபவமும் நிரம்பியவர். சாம தான பேத உபாயங்களை எல்லாம் அவர் மேற்கொண்டு முயன்றார். ஒன்றிலும் அரசாங்கம் அசையவில்லை. பின்னரே தண்டோபாயத்தை அஹிம்ஸை முறையில் அவர் கைக்கொண்டார். கைக்கொள்ளுமுன், பார்டோலி விவசாயிகளை எல்லாம் அவர் கூட்டிப் பேசினார். 1928-ஆம் ஆண்டு பிப்ரவரி 12-ந்தேதி அக்கூட்டம் நடைபெற்றது. கண்மூடித்தனமாக அவரும் காரியம் செய்யார், பிறரையும் செய்யச் சொல்லார். ஆதலின் விவசாயிகளை நோக்கி, அவர் கூறியது இது:—

"எண்ணித் துணிக கருமம் என்பர் ஆன்றோர். ஆய்ந்து ஓய்ந்து பாராதான் காரியம் சிதறிப்போம். ஆதலின் ஆர அமர ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வருதல்வேண்டும். நான் தலைவனாக இருப்பது கொண்டு, எல்லாம் இனிது முடியும் என்று நீங்கள் எண்ணிவிட வேண்டாம். அநீதியையும் கொடுமையையும் எதிர்க்க வேண்டும் எனும் உணர்ச்சி உங்களிடம் நிரம்பி இருப்பின், போரில் இறங்குங்கள். போர் புரிதல் என்பது எளிதன்று. அதில் எத்துணையோ கஷ்ட நஷ்டங்கள் நேரும். போரில் நீங்கள் புறங்கொடுத்துவிடின், நீண்டகாலம் தலைதூக்க முடியாது; வெற்றிமாலை சூடின், சுயராஜ்யத்திற்கு அடிப்படைகோலிய பெருமையும் உங்களுக்குக் கிட்டும்; பாரபட்சமற்ற கமிட்டியை நியமித்து விசாரிக்கும் வரையில், வரி வசூலை நிறுத்தி வையுங்கள் என்று அரசாங்கத்துக்கு எழுதினேன். எழுதியும் பலன் இல்லை. அரசாங்கத்துக்கோ மிருக பலம் மிக அதிகம். வருவது வருக, போர்புரிந்தே தீருவோம் எனும் உறுதியைக் கொண்டுதான், அரசாங்கத்துடன் நீங்கள் போர்புரிதல் வேண்டும். கஷ்ட நஷ்டங்களைச் சகித்துநிற்க ஜனங்கள் துணிவு கொள்ளின்

எத்தகைய கொடியவனும் இணங்கி வர நேரும். நிலத் தீர்வையின் உயர்வு ஒரு சில லட்சம் ரூபா தானே என்பது முக்கியம் அன்று. சுய மதிப்பை நிலை நாட்ட வேண்டும், என்பதே பிரதானம். இஷ்டப்பட்டபடி அரசாங்கம் வரி விதிப்பதோ? இதனை நீங்கள் எதிர்க்கவேண்டும். இதற்கு அடக்கம் பொறுமை தன்னம்பிக்கை இவை மிக அவசியம். பல வழிகளிலும் அரசாங்கம் உங்கள் வலியைச் சோதித்துப் பார்க்கும். உங்களில் சிலரை ஆசை காட்டிப் பிரிக்கும்; மற்றும் சிலரையோ பல துறையிலும் பேதிக்கும். உங்களுக்குள் பிளவு தோன்றக் கூடாது. யாது நேரினும், வரிகொடோம் எனும் துணிவு வேண்டும். பாரபட்சமற்ற கமிட்டியை அரசாங்கம் நியமிக்கும் வரையில், அல்லது வரி உயர்வை ரத்து செய்யும் வரையில், சத்தியப்போர் நடந்தேதீரும். இனி, யான் சொல்லக்கிடப்பது ஒன்றும் இலது. ஆர அமர ஆலோசியுங்கள், கஷ்ட நஷ்டங்களை எண்ணிப் பாருங்கள், ஆண்டவன் சாட்சியாகக் காரியம் செய்யுங்கள். உங்களிலே முன்னணியில் நிற்போரை முதலில் அரசாங்கம் கொண்டு போய்விடும்; அல்லது அன்னவரின் நிலங்களைப் பறிமுதல் செய்யும். அவ்விதம் நிகழினும் நிகழ்க, எங்கள் மனம் சலியாது, என்று உங்களுக்கு உறுதி இருப்பின், சண்டையில் இறங்குங்கள், சண்டையோ தர்மமான சண்டை!''

மகா ஜனங்கள் அச் சொல்பெருக்கைக் கூர்ந்து கவனித்தார்கள்; அதன்மேல், அரசாங்கம் வழிக்கு வரும் வரையில் வரி கொடுப்பதில்லை என்று ஒரு மனதாகத் தீர்மானம் செய்தார்கள்; தீர்மானம் செய்கையில், அவர்கள் கரகோஷம் செய்யவில்லை. பரிசுத்த குர்-ஆனிலிருந்தும் வேதத்திலிருந்தும் சுலோகங்கள் படிக்கப்பட்டன. அனைவரும் ராமநாம பஜனம் செய்தனர். இவ்வகையில் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்று.

7. சுயராஜ்ய சித்தி

அரசாங்கத்தின் போக்கையும் போர்முரசின் முழக்கையும் கண்டு காந்திமகான் வாளா இருக்கவில்லை. ஜனங்களின் கட்சியை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அவர் தமது எங் இந்தியா பத்திரிகையில் எடுத்துரைக்கலானார்.

"வல்லபபாய் பேரும் கீர்த்தியும் பெறுதவர் அல்லர். ஆமதாபாத் நகர சபையின் தலைவராக அமர்ந்து, அவர் அரிய ஊழியம் புரிந்தவர். அதுகண்டு அரசாங்கமும் அவரைப் பாராட்டி யிருக்கிறது. கூர்ஜரத்தில் வெள்ளம் புரண்டபொழுது அவர் அபார ஊழியமும் தொண்டும் ஆற்றினார். இதற்கும் அரசாங்கம் அவரைப் புகழ்ந்து பேசிற்று. ஆயினும் என்ன? அரசாங்கத்தின் மதிப்புக் குப்பங்கமும், வரி வருமானத்திற்குத் தடையும், ஏற்படக் கூடிய போரில் இறங்கியவுடனே, அவரது பழைய ஊழியத்தை அரசாங்கம் புறக்கணித்துவிட்டது. வெளியான் வந்து வீண் போர் மூட்டுகின்றான் என்று அரசாங்கம் அவமதிக்கவும் தொடங்கிவிட்டது. நல்ல காரியத்தில் எத்தகைய அவமதிப்பையும் வல்லபபாய் பொருள்படுத்தார், முன்னணியில் நிற்கும் பொதுஜன சேவகனை அவமதித்தல் அழகாமோ? அரசாங்கத்தின் பொறுப்பற்ற தன்மைக்கு வேறு அத்தாட்சி வேண்டுமோ? அரசாங்கம் தடுமாற்றம் கொண்டதின் காரணம் யாது? நிலவரி என்பது சட்ட வரம்புக்கு உட்படாத ஒன்றாகும். நிலவரியை உயர்த்தலும் நிர்வாக அதிகாரிகளின் கைக்குள் அடங்கிக் கிடக்கின்றது. சட்ட வரம்புக்கு அல்லது நியாய வரம்புக்கு அதனை உட்படுத்த இன்றளவும் எத்துணையோ முயற்சி செய்தோம், ஒன்றும் பலிக்கவில்லை; என்ன செய்வது?"

"அரசாங்கமோ தனது மிக அபாரமான செலவை —நாளுக்கு நாள் அதிகரிக்கும் செலவை ஈடுசெய்தல்

வேண்டும். அரசாங்கத்தின் செலவில் மிகப் பெருத்தது ராணுவ இனமாகும். நிலவரியை இஷ்டப்படி உயர்த்த இடமுளது, விவசாயிகளுக்கோ அதில் வாயில்லை. வரி விதிப்பதில் மக்களுக்குச் செல்வாக்கு இருப்பின், அல்லது வரி உயர்வை மக்கள் எதிர்த்து நிற்பின், பொறுப்பற்ற ஆட்சிமுறை என்பது மறைந்துபோம். பாரபட்சமற்ற கமிட்டியை நியமித்து விசாரணை செய்யவேண்டும் என்பதே விவசாயிகளின் வாதமாகும். எல்லா வழிகளையும் பார்த்தபின்பே வேறுவழியின்றி வரிகொடா இயக்கத்தில் இறங்க நேர்ந்துள்ளது. பார்டோலியில் தொடங்கியுள்ள வரிகொடா இயக்க சத்தியாக்கிரகம், சுயராஜ்ய சித்திக்காகத் தோன்றியுள்ள சத்தியாக்கிரகம் அன்று. இதனை வல்லபபாய் நன்கு விளக்கிச் சொல்லியுள்ளார். இந்த சத்தியாக்கிரகம் குறிப்பிட்ட ஒரு நோக்கத்தைக் கொண்டதாகும். அநீதியான வரியை எதிர்த்து மறுக்க ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு; அஃது கடமையும் ஆகும். பார்டோலி மக்கள் வரி உயர்வினுல் வருந்துவதுபோல், இந்தியாவின் ஏனைய பாகங்களில் உள்ளோரும் வருந்தி நிற்கின்றனர். இந்த சத்தியாக்கிரகத்தினுல் ஒரு விஷயத்தில் சுயராஜ்ய சித்திக்கும் அனுகூலம் எற்படும். எங்ஙனம் எனில், இழைக்கப்படும் தவறு கண்டு வாளாவிருக்க இயலாது எனும் உணர்ச்சியை ஊட்டும் எந்த முயற்சியும், சாந்தியுடன் எதிர்த்து நிற்பதற்கு ஏற்ற ஆற்றல் அளிக்கும் எக்காரியமும், சுயராஜ்ய சித்தியை நெருங்கச் செய்யும். ஆதலின், பார்டோலி வாசிகளின் தீரமான போராட்டத்தில் மகா ஜனங்கள் பக்கபலமாக நிற்பாராக!" இங்ஙனம் காந்தியடிகள் எழுதியபின், தேசத்தார் அனைவரும் அந்த இயக்கத்தை நன்கு கவனித்து வரலாயினர்; பற்பல தலைவர்கள் பார்டோலி சென்று, நிலையை உணர்ந்துகொள்ள முற்பட்டனர். சட்டசபையினரும் சிரத்தை கொண்டனர்.

8. அச்சமில்லை

இரும்பு பிடித்தவன் கையும் துரும்பு பிடித்தவன் கையும் சும்மா இரா. அதிகார ஆணை தாங்கியவன் கையும் அப்படித்தான். பார்டோலியிலே ஒரு வட்டத்தில் விவசாயிகள் முன்னதாகவே வரி செலுத்திவிடுதல் வழக்கம். அத்தகைய இடத்தில் அமல்நடத்த அதிகாரிகள் தொடங்கினர். பத்துத் தினங்களுக்குள் முழுத் தீர்வையையும் செலுத்திவிடவேண்டும், இன்றேல் நூற்றுக்கு 25-வீதம் அபராதம் விதிக்கப்படும் என்பதே ஆக்கினையின் சாரம். இவ்வளவுடன் அதிகாரிகள் நிற்கவில்லை. தலையாரி என்பான் ஓர் ஏழை விவசாயியை அடித்துத் துன்புறுத்தினான்; முதலிலே அவன் பயமுறுத்திப் பார்த்தான், அது சாயவில்லை; உடனே அடியும் உதையும் கொடுத்தான். மற்றொரு கிராமத்திலே இருவிவசாயிகளை அநீதமாக அதிகாரிகள் அடைத்து வைத்தார்கள். நிலத் தீர்வையைச் செலுத்திய பின்பே இருவருக்கும் விடுதலை கிடைத்தது. இவை யனைத்தும் சில்லரை அதிகார தேவதைகளின் வேலை. டிப்டி கலெக்டர் எனும் பெரிய அதிகாரியின் நடத்தையைக் குறிப்பிடுவோம். முக்கியமான மனிதர்களை அவர் வரவழைத்தார், அவர்களுடன் இனிமையாகப் பேசினார், நிலத்தீர்வையில் கொஞ்சமேனும் கொடுங்கள் என்று கோரினார். அம் மனிதர் அதற்கு இணங்கவில்லை. அதன் மேல், "நான் கேட்டுக்கொள்கிறேனே, என்னைத் திருப்தி செய்யவாவது ஒரு ரூபாயேனும் கொடுங்கள்", என்று அவர் பணிவுடன் புகன்றார். "ஐயா! உங்கள் வாக்கைத் தட்டி நடக்க நாங்கள் பிரியப்படவில்லை; உங்களை அவமதிக்கவும் நாங்கள் எண்ணவில்லை. எனினும் வரிகொடாமை என்பது கிராமத்தாரின் ஒருமுகமான தீர்மானம். கிராம மகா ஜனங்களைக் கலந்துகொள்ளாமல் நாங்கள்

எதுவும் செய்வதற்கில்லை", என்று அவர்கள் பதில் கொடுத்தார்கள். "நல்லது! உங்களைச் சிறையில் போட்டால் என்ன செய்வீர்கள்?" என்று அச்சுறுத்தினர் அந்த அதிகாரி. "ஏன் ஐயா! எங்களைச் சிறையில் போடவேண்டும்? நாங்கள் ராஜத்துவேஷம் செய்யவில்லையே", என்றனர். டிப்டி கலெக்டர் என்ன செய்வார்? வாயிழந்ததற்கு உள்ளூர வருந்தி வெளிக்குமட்டும் சிரித்தார்.

நயமும் பயமும் காட்டி அதிகாரிகள் அமல் நடத்தியதிலே சிலர் தடுமாற்றம் கொண்டனர். ஜனங்களின் உறுதியைக் குலைத்துவிடவேண்டும் என்பதே அதிகாரிகளின் கருத்து. பாமர விவசாயிகளில் சிலர் பரிதவிக்கலாயினர். அதுகண்டு வல்லபபாய் விளம்புவார்:—"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பது இல்லையே என்று நீங்கள் அனைவரும் கோஷம் செய்யவேண்டும். சிலரிடம் சிறிதளவு அச்சம் காணப்படுகின்றது. அதனையும் அகற்றிவிடுங்கள். நீங்கள் ஏன் அச்சம் கொள்ளவேண்டும்? அரசாங்கமல்லவோ அஞ்சிக் கிடத்தல் வேண்டும்! ஜனங்களின் சம்மதம் இன்றேல், ஆட்சிமுறை நடக்காது. நீங்கள் கண்மூடிகளாகக் கிடப்பதனால் ஆட்சிமுறை நடவா நிற்கின்றது. அமைதியும் சுகவாழ்வும் அரசாங்கம் தேடித் தந்திருப்பதாக நீங்கள் எண்ணியிருக்கிறீர்கள். இது சுத்தத் தவறு. தீமைகண்டு நியாயவழியில் அருவருப்புக் கொள்ளவும் உங்களுக்குச் சக்தி இல்லாது போய்விட்டது. கோழைத்தனம் கூடவே கூடாது. அச்சமில்லை எனும் மருந்தூட்டவே நான் முனைந்து நிற்கின்றேன். நீங்கள் நடை பிணங்களாக இருத்தல் தகுமோ? உங்களிடம் உணர்ச்சி இல்லையே. உங்கள் பார்வையிலும் கம்பீரம் காணப்பட வில்லையே. வீறு காட்டி நிற்பீராக!"

அச்சொல்கேட்டு அனைவருக்கும் ஊக்கம், உற்சாகம் தைரியம், உறுதி முதலியன ஓங்கிவளரத் தலைப்பட்டன.

வல்லபபாய் கணநேரமும் சும்மா இராமல், ஊர் ஊராக்ச் சென்று மக்களைத் தட்டி எழுப்பி, சத்தியப் போர்முறைகளை ஆங்காங்கு நன்கு வகுத்துவைத்தார்.

9. கலெக்டரின் திகைப்பு

சத்தியமே ஜயம், அதற்கு மிஞ்சியது ஒன்றும் இல்லை. அதனை வெல்லுதல் ஆண்டவனாலும் ஆகாது. ஆயினும் அதிகாரிகளோ சத்தியத்தை வெல்ல முயன்றனர். முயன்ற வழியோ மகா மோசமானது. முன்னம் சொன்ன டிப்டி கலெக்டர் ஒரு தந்திரம் கையாண்டார். வணிக வகுப்பைச்சேர்ந்த இரண்டு கனவான்களை அவர் சரிப் படுத்திக்கொண்டார். அவர் சொல்லியவண்ணம், இருவரும் தங்கள் பணப்பெட்டியில் முறையே 1500, 785 ரூபாய்கள் வைத்திருந்தனர். குறிப்பிட்ட நேரத்தில் அதிகாரிகள் வந்து, அத்தொகையை ஜப்திசெய்து எடுத்துக்கொண்டு போயினர். வஞ்சனையாக இவ்வளவும் நடந்திருப்பதை ஜனங்கள் அறியலானார்கள். உடனே பலருக்கு ஆத்திரம் பொங்கிவிட்டது. இருவரையும் ஜாதிப் பிரஷ்டம் செய்துவிடவேண்டுமென்று தீர்மானம் ஆயிற்று. ஜனங்களின் கோபக்கனல் கொழுந்துவிடுவதை வல்லபபாய் அறியலானார். உடனே அவர் நள்ளிரவில் அந்த ஊர் சேர்ந்து அஹிம்ஸா போதம் புரிந்தார்.

"நீங்கள் கோபத்திற்கு ஆளாதல் அடுக்குமோ? அஹிம்ஸையே பூண்டு நிற்பதாக நீங்கள் சபதம் செய்திருக்கிறீர்கள். இருவர் தவறிப் போயினமை கண்டு உங்களது உறுதி ஒங்கவேண்டும்; உங்களிடம் வெகுளி தோன்றக் கூடாது. அதிகாரிகளின் மாயவலையில் சிக்கிவிட்ட இரண்டு அன்பரிடம் கோபமா கொள்வது? பரிதாபமும் இரக்கமுமே கொள்ளல்வேண்டும். அம் மாய வலைவீச்சு மகா ஆபாசமானது. அந்த ஆபாசத்தை ஆய்ந்து பார்த்

தல் அழகாமோ? ஆய்ந்து பார்ப்பின், ஆபாசம் உங்களை அணுகும். நம்மில் கசடர் தோன்றுதல் இயற்கையே. இதில் என்ன ஆச்சரியம்! அந்த இருவரையும் சும்மா விட்டுவிடின், உங்களது உறுதி நழுவிப்போம் என்று எண்ணுகிறீர்களோ? ஆண்டவன் அறியச் சபதம் பூண்டோர் பிறழ்ந்துவிடின், நாம் என்ன செய்யலாம்? அன்னாரின்மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டாம். இஃதே எனது கோரிக்கை. யாது நேரினும் நேருக. திகில் கொள்ளாதீர்கள்."

அப்போதம் கேட்டு அனைவரும் சாந்தம் கொண்டனர். பின்னர் சிலர் அவ்விருவரையும் அணுகி நற்புத்தி புகட்டினர்; உடனே ஒருவர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்; சத்தியாக்கிரக நிதிக்கு 800-ரூபா கொடுத்து பரிசுத்தரும் ஆனார். அங்கே வனசர வகுப்பினர் பலர் உளர். அவர்களில் பலர் மிராசுதாரர். அவர்களை வெருட்டி உருட்டி வெற்றிகொள்ளலாம் என அதிகாரிகள் மனப்பால் குடித்தார்கள். அது பயன்படவில்லை.

டிப்டி கலெக்டர்:—நீ ஏன் இன்னும் வரி கொடுக்கவில்லை?

வனசரன்:—வரி உயர்வைக் குறையுங்கள். அப்பால் தீர்வை கொடுப்பேன்.

டிப்டி:—வரி உயர்வு கொஞ்சம் தானே!

வன:—அக்கொஞ்சமும் எங்களால் தாங்கமுடியாது. வெறுங்கூழ்தான் இப்போது குடித்துவருகிறோம். அக்கூழையும் நீங்கள் பறிப்பது அழகோ?

டிப்டி:—தீர்வை செலுத்தாவிட்டால், உன் நிலம் போய்விடும், ஜாக்கிரதை!

வன:—வானம் பொழியுது, பூமி விளையுது, வானம் பொழிகையில் எங்கள் பூமியை எப்படி இழப்போம்?

டிப்டி கலெக்டர் திகைத்துப்போனர். அதன்மேல் நிலங்களைப் பறிமுதல் செய்ய அதிகாரிகள் முனையலானர் கள். ஒரு கிராமத்திலே முக்கியமான எட்டுப் பேருக்குப் பறிமுதல் அறிக்கைகள் சாதரா செய்யப்பட்டன. அது கண்ட ஒருவர், ரெவினியு இன்ஸ்பெக்டருக்கு எழுதிய கடிதம் வருமாறு :—"ஐயா! இந்த வட்டத்தில் என்னைக் கோழை என்று கருதினீர்களோ? தாலூகா முழுவதை யுமே நீங்கள் பறிமுதல் செய்யினும், ஒருவரும் பணியப் போவதில்லை. நீர் அரசாங்கத்தின் உண்மை ஊழியரா னல், உமது கடமை என்ன தெரியுமா? உள்ள நிலையை யும் ஜனங்களின் கஷ்டத்தையும் அரசாங்கத்துக்கு எடுத் துச் சொல்லி, எங்களுக்குப் பரிகாரம் தேடித் தரவேண் டும். ஜனங்களைத் துன்புறுத்த நேரும் அநீத வேலையை விரைவில் விட்டொழியும். விவசாயிகளின் நிலங்களைப் பறிமுதல் செய்வதினும், உமது உத்தியோகத்தை ராஜி னுமாச் செய்தலே மேலாம்."

இவ்விதம் வீரசந்தர் எழுதிய கடிதம் பலருக்குப் புத் துயிர் ஊட்டியது. நிலங்களை இழக்க விருக்கும் எண்மரை யும் எல்லாரும் பாராட்டலாயினர். இதர இடங்களில் உள்ளவர்களோ அப்பறிமுதல் கண்டு ஆத்திரம் கொண் டார்கள். காந்திமகான் எழுதியது ஈதாகும் :—

"மகா ஜனங்களின் மனத்தில் திகிலை ஊட்டவே படு கொலைபுரிந்தான் ஜெனரல் டயர். அஃது புதிய கொள்கை அன்று. ஸிவிலியன்கள் திகிலூட்டியே தங்கள் சிறப்பை நிலை நாட்டியுளர். பார்டோலியிலே சத்தியாக்கிரகிகளின் நிலங்கள் பறிமுதல்செய்யப்படும் என ஆணை பிறந்துளது. பிரபல வணிகரையே பொறுக்கி எடுத்திருக்கின்றனர். வணிகர் கோழைகள், எனவே பணிந்துவிடுவர் என்பது அதிகாரிகளின் கருத்துப்போலும்; பயங்கரம் தொடங் கப்பட்டிருத்தல் கண்டு, சத்தியாக்கிரகிகள் சிறிதும் ஆச்

சரியம் அடையவேண்டாம். பறிமுதல் மட்டுமா? இன்னும் எத்தனையோ நேரும். ஆதலின் தங்கள் மனவலியை மெய்ப்பிக்க சத்தியாக்கிரகிகளுக்கு இதுவே தருணம். வீரச்சந்தர் என்பார் செலுத்தவேண்டிய தொகை 160-ரூபாதான். இதற்கு ஆயிரக்கணக்கில் விலைபோகும் நிலங்களைப் பறிமுதல்செய்தல் டயராட்சியேயாம். ஒரு ரூபாய்க்காக ஆயிரம் ரூபா அடித்துப் பிடுங்குவோன் மகா கொடியவன் ஆவான்; அல்லது இராவண்ணன் ஆவர்ன். நிலத்தைப் பறிமுதல் செய்யவும், சிறையில் போடவும், அரசுக்கு சட்ட பூர்வமான அதிகாரம் உளது. அச்சட்டங்களோ அரசே இயற்றினவாம். பறிமுதல் அறிக்கை கண்டு யாரும் பரபரப்புக் கொள்ளவேண்டாம். அரசாங்கமும் சரி, பறிமுதல் நில்த்தை வாங்கவரும் துரோகியும் சரி, நிலத்தை விழுங்கிவிட முடியாது. உண்ட்வரை விஷம் கொல்லும். பறிமுதல் நிலத்தைவாங்குதலும் அஃதேபோலாகும். சொன்ன சொல்லையும் சுய மதிப்பையும் சத்தியத்தையும்விட நிலமா ஒரு பெரியது, ஒரு குழிநிலங்கூட இல்லாதோர் இத்தேசத்திலே எண்ணிறந்தோர் ஆவர். போனவருஷம் கூர்ஜரத்திலே வெள்ளம் புரண்டதில், பலருடைய நிலங்கள் பாழாய்விட்டன; அவை பலவும் மணல் காடுகளாகக் கிடக்கின்றன. தெய்வ சங்கல்பத்தால் நேர்ந்த துயரை கூர்ஜரம் தாங்கி நின்றது. மனிதரால் நேரும் துயரை பர்டோலி தாங்கி நில்லாது போமோ? இஃது ஒரு பிரமாதமோ?"

பறிமுதலைக் குறித்து வல்லபபாய் பேசியது இது:—
"பறிமுதல் பறிமுதல் என்கிறீர்களே? பறிமுதல் என்றால் என்ன? பறிமுதலான நிலங்களை இங்கிலாந்துக்கு அவர்கள் எடுத்துக்கொண்டு போய்விட முடியுமா? நிலங்கள் தங்களுடையன என்று அரசாங்கத்தார் தங்கள் புத்தகத்தில் எழுதி வைத்துக்கொள்ளலாம். ஆயினும் உங்க

ளிடம் ஒற்றுமை இருப்பின், அந்நிலங்களைப் பயிரிட யார் முன்வர முடியும்? உங்கள் நிலங்கள் எல்லாம் பறிமுதல் ஆகிவிடின், கூர்ஜ்ஜர நாடனைத்தும் உங்களுக்குத் தலை கொடுக்க முன்வரும். ஒவ்வொரு கிராமமும் போர்க்கள மாக விளங்கவேண்டும். கிராமந்தோறும் அரசாங்கத் துக்கு ஒரொரு முனிசீப்பும் தலையாரியுமே உளர், நமக்கோ வயதுவந்த வாலிபர் அனைவரும் தொண்டர்கள். அத் தொண்டரைக்கொண்டு நாம் எத்துணையோ காரியம் இனிது சாதிக்கலாம், வெற்றியும் பெறலாம்."

10. பொன் மொழி

நயமும் பயமும் காட்டிப் பார்த்தும், மக்களின் மன வலியை மாய்க்க முடியவில்லை. அதன்மேல் அரசுக்குச் சீற் றம் பொங்கலாயிற்று. அடக்கு முறைகள் வரம்பு கடந்து தாண்டவம் ஆடலாயின. எங்கும் ஜப்தி வாரண்டுகள் பறந் தன; பறிமுதல் அறிக்கைகளும் பொங்கி எழுந்தன; தொண்டர்களைச் சிறை செய்தலும் சீறி நின்றது. அதன் மேல் வல்லபபாய் பல இடங்களில் பொன்னுரைகள் பகர லானார். அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிடுவோம்.

"அதிகாரிகள் வந்து உங்கள் வீட்டுக் கதவுகளைப் பிளக்கட்டும்; பூட்டுக்களை உடைத்து எறியட்டும்; உங்கள் பண்டங்களையும் வாரிக்கொண்டு போகட்டும். இவற்றை எல்லாம் புன் சிரிப்புடன் சகித்துக் கொள்ளுங்கள். நீங்கள் இம்மியும் சினம் பூத்தல் ஏற்காது. நம் தாலுக்கா எங்கும் போலீஸ் மயமாக இருக்கின்றது. இருப்பினும் என்ன? நீங்கள் அமைதி கொண்டு நிற்கையில், அவர்கள் சோம்பிக் கிடக்கவேண்டும். நாம் தியாகம் செய்யும் காலம் வந்துவிட்டது. அந்தத் தியாகமோ மாசு மறு இன்றித் துலங்கவேண்டும். அரசாங்கம் சினம் பூத்து நிற்கின்றது. கண்மூடித்தனமான அடக்கு முறையிலும் அது இறங்கியு

ளது. நம்மிலே பலர் சீக்கிரம் கைதி செய்யப்படலாம். நல்லது. நாம் சாந்தமும் அமைதியும் கொண்டு நடப்போம்.''

"பார்டோலிக்குப் பரம கௌரவம் கிட்டியுளது. போலிஸார் ஆயுத பாணிகளாக எங்கும் திரிகின்றனர், குதிரைவீரரோ துப்பாக்கி தாங்கி தெருவெங்கும் செல்லுகின்றனர். சிறிது காலத்துக்கு முன், உங்களைப்பற்றி அரசாங்கம் கவனிக்கவே இல்லை; இப்போதோ கிராமந் தோறும் அரசாங்கம் ஆர்ப்பாட்டத்துடன் தோன்றுகின்றது. இந்த அருங்கோடையிலே போலிஸ் ஸூபரின்டெண்டெண்டு உங்கள் கிராமத்திற்கு விஜயம் செய்கிறார். இது சாமானியமோ? ஜப்தி அதிகாரிகள் மூவர் இங்கும் அங்கும் அமல் நடத்துகின்றனர். உங்கள் வீடுகளிலிருந்து கைப்பற்றிய பொருள்களைச் சுமந்து செல்ல சூரத் நகரிலிருந்து மோட்டார் வாகனங்கள் வருகின்றன. முன்னம் மாட்டு வண்டிகளில் ஏறி அறியாத பியூன்களும் பட்டாணியரும் இப்போது மோட்டார் வாகனங்களில் சவாரி போகின்றனர். பாருங்கள் பார்டோலிக்குக் கிட்டியுள்ள பெருமையை. அரசின் போக்கே போக்கு!''

"கலாட்டா கிளம்ப வேண்டும் என்று அரசாங்கம் விரும்பி நிற்கின்றது; நம்மை ஹிம்சையில் இறங்கச் செய்யவும் முயலா நிற்கின்றது. உங்களை நசுக்க முயலினும் நீங்கள் சலிக்காதீர்கள். அரசாங்கம் தடுமாற்றம் கொண்டுவிட்டது. நம்மில் பிளவு உண்டு பண்ண அதிகாரிகள் பெரிதும் முனைந்திருக்கிறார்கள். கள்வரைப்போல் அவர்கள் தோன்றிக் கருமம் புரிகின்றனர். அவர்களின் கண்ணில் நீங்கள் படக்கூடாது; அரசாங்கம் உங்கள் நிலத்தை இங்கிலாந்துக்கு எடுத்துக்கொண்டு போகட்டும். மெஷீன் பீரங்கிகளும் விமானங்களும் கொண்டு, உங்கள் தாலூகாவை அவர்கள் சூழ்ந்து கொள்ளட்டும். நம்மிடம் படைவலி இல்லை. எனினும் அவ்வலியை விழுங்கக்கூடிய

அரிய சாதனம் உளது. அஃதே சத்தியம் எனும் வாளாம். உங்களுடைய ஆடு மாடுகளையும் பிறவற்றையும் அரசாங்கம் பறித்துக் கொள்ளலாம். உங்கள் ஆன்மாவைப் பறிக்க அவர்களால் ஆகாது. எப்போதும் ஆண்டவன் சத்திய சந்தரின் பக்கலில் இருப்பான். அடக்குமுறை கண்டு அஞ்சுவோர் யாத்திரை போய்விடுக; அல்லது சுக வாசஸ் தலம் சென்றுவிடுக. கஷ்டத்திற்குப் பின்புதான் சுகம் உண்டு. அருங்கோடைக்குப் பின்னரே, குளிர்ந்த மழை காலம் வரும், பொன்னைத் தீயிலிட்டுக் காய்ச்சிப் புடம் பார்ப்பதுபோல், உங்களை அடக்குமுறை கொண்டு அலசிப் பார்த்த பின்னரே அரசாங்கம் வழிக்குவரும். நீங்கள் வெற்றி மாலை சூடிவிட்டால், இந்தியாவின் ஏனைய பாகங் களும் வரிகொடா இயக்கம் கொள்ளுமே என்று அஞ்சி அரசாங்கம் அபாரமான அடக்குமுறைகளைக் கையாளு கின்றது. இந்தியாவின் கௌரவத்தை நீங்கள் காக்க வேண்டும். நீங்கள் தவறிவிடின், பாரதபூமியின் கௌர வம் என்னாகும்? மண்ணாகிப்போம்.''

அடக்குமுறை அதிகரிக்க அதிகரிக்க, ஜனங்களின் மனவலியும் பெருகலாயிற்று. சிலரோ அதிகாரிகளின் நடமாட்டங்களைத் தடுக்க குயுக்திமார்க்கம் கருதலாயினர். மோடார் வண்டிகளின் ரப்பர் குழாய்கள் வெடித்துப்போ கும் வண்ணம் ரஸ்தாக்களிலே ஆணிகளைச் செருகிவைத்த னர்; வழிநடைகளிலே மரங்களை வெட்டிப்போட்டு வேலி யும் அமைக்கலாயினர். அதுகண்டு வல்லபபாய் மனம் தாளவில்லை. "நமது யுத்தமோ தர்ம யுத்தமாம்; மேலும் அஹிம்ஸையை அடிப்படையாகக் கொண்டதுமாம், மக்காள்! அடக்குமுறைக்கு ஆளாகி நீங்கள் சாக நேரி னும், முகமலர்ச்சியுடன் சாதல்வேண்டும். பிறருடைய இரத்தம் ஒரு சொட்டுக்கூட சிந்தக்கூடாது. யானோ சபர்மதி ரிஷியின் சேவகனாக இங்கு இருக்கின்றேன்.

பார்டோலியில் சாந்தி நிலை நிற்கவேண்டும் என்பதே அவரது கட்டளை. அஃதே எனது கடமையும் ஆம். அம் மகானுடைய பெயருக்குச் சிறிதும் மாசு ஏற்படக்கூடாது."

பல நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அவைகளை வாங்குவோர் அரிதாகிவிட்டனர். யாரோ இரு பார்ஸியர் அந்நிலங்களை வாங்கியதாக வல்லபபாய் அறியலானார். உடனே அவர் கூறியது. "நிலங்களை வாங்கியும் என்ன? அவைகளை அனுகவும் அவர்களால் ஆகாது. பார்ஸியர் வாங்கி யிருப்பாரே யானால், அந்நிலங்களை உழுது பயிரிட முடியாது. உழுது பயிரிட முடியுமாயின், அந்நிலங்களில் வீற்றிருந்து சத்தியாக்கிரகம் செய்யும் பார்ஸிய சோதரசோதரிகளைச் சுட்டுக்கொன்று அன்னவரின் எலும்பையே எருவாகக்கொண்டுதான் பயிரிடலாம். ஒரு சமயம் முகம்மதியரோ ஹிந்துக்களோ வாங்கியிருப்பின், அவர்களும் அவ்விதமே சத்தியாக்கிரகிகளைச் சுட்டுக் கொன்ற பின்புதான் பயிரிட நேரும்."

படை பலங் காட்டிப் பயமுறுத்தி நிற்கும் அரசாங்கத்தை நோக்கி அவர் சொன்னது:—"கேலிக்கு இடமான படைபலச் செருக்கும் அடக்குமுறையும் காட்டி, ஏழை விவசாயிகளைத் துன்புறுத்துவதேன்? அதுகண்டு வேளாளர் மனமொடிந்து போகார். ராணுவத்தைக் கொணர்ந்து ஒரே அடியில் எல்லாவற்றையும் நிர்மூலம் செய்துவிடுதல் மேல். ராணுவச் செலவுக்காக நாம் கொட்டிக்கொடுக்கும் தொகை கொஞ்சம் அன்று. எனவே அந்த நேர்த்தியான சேனையைக் கண்ணால் காணும் பாக்கியம் நமக்குக் கிடைக்கட்டும். பீரங்கி என்றால் என்ன என்று நமது வேளாளர் இன்றளவும் அறிந்திரார். பீரங்கியின் முழக்கத்தையும் துப்பாக்கி வேட்டையும் அவர்கள் கேட்டானந்திக்கட்டும். அந்நாளே வேளாளருக்குச் சுதினமும் புதினமும் ஆகும். உடனே சத்தியமும் தலைதூக்கும்."

பார்டோலியின் நிலையைக் கண்ணால் கண்டபின், ஸ்ரீமான் நரிமான் பேசியது இது.—"ஆங்கில ஆட்சியின் பயனாக தேசத்திலே அமைதியும் ஒழுங்கும் ஏற்பட்டிருப்பதாகச் சொல்வதுண்டு; கொள்ளைக் கூட்டத்தினரும் வழிப்பறியாளரும் மறைந்துவிட்டதாகவும் உரைப்போர் உளர். நல்லது! இன்று பார்டோலியிலே பட்டாணியரும் பம்பாய் சோதாக்களுமே கோலாகலம் கொள்கின்றனர். அப்பட்டாணியரோ பம்பாயிலுள்ள காவாலிகளில் தலை சிறந்தோர். அவர்களை அல்லும் பகலும் போலீசார் கண்காணித்து வருவர். அத்தகைய பேர்வழிகளைக் கூலிக்கு அமர்த்திக் கோலம் காண்வதைவிட அரசாங்கத்துக்கு வேறு அவமானம் வேண்டுமோ?"

11. வெற்றிமாலை

ஆனைமட்டும் பார்த்தான், ஓர் ஆளைவிட்டும் பார்த்தான் என்பர். அவ்விதம் அதிகாரவர்க்கம் தன்னால் ஆனமட்டும் முயன்று பார்த்தது. பார்டோலி வேளாளரை வெற்றிகொள்ள அவர்களால் ஆகவில்லை. சத்தியத்தை, ஆன்மபலத்தை, தெய்வீக சக்தியைப் புரட்டி யெறிய இயலுமோ? சத்திய இயக்கம் வலுக்க வலுக்க, அதிகாரிகளின் கஷ்ட நஷ்டமும் வளரலாயிற்று. ஒருமுறை ஜில்லா கலெக்டர் பார்டோலிக்குப் போனார். உடனே கடைகள் எல்லாம் மூடப்பட்டுவிட்டன. அவருக்கு ஒரு சாமானும் கிடைக்கவில்லை. வேறோர் ஊருக்கு அவர் போக விரும்பினார். வண்டி கிடைக்கவில்லை. வல்லபபாய் படேல் அமர்த்தியிருந்த வாடகை மோட்டார் வண்டிக்காரனை நாடினர் சேவகர். அவன் மறுத்துவிட்டான். அவனது லைசென்ஸைப் பிடுங்கிவிடுவதாகப் பயமுறுத்தியும், அவன் இணங்கினானில்லை. இரவிலே வெகுநேரஞ்சென்று கலெக்டர் மற்றோர் ஊருக்குப் போனார். அவரது வருகையைக் கண்

டதும், குழந்தைகள் தண்டோரா போட்டன. உடனே வீடுகள் யாவும் மூடப்பட்டுப் போயின. கிராம மணியக்காரனை அவர் வரவழைத்து, வரிசெலுத்தினையா என்று வினவினர். அவன், "இல்லை, என்னுல் செலுத்த முடியாது", என்றான். ஊராரையேனும் செலுத்தச்சொல் என்ருர் கலெக்டர். "என் வார்த்தையை அவர்கள் கேளார். பறிமுதலுக்கும் அன்னர் அஞ்சார்" என்று மணியக்காரன் பதில் கொடுத்தான். கலெக்டர் விதியின்றி வெகுளி கொண்டு வந்த வழியே திரும்பிச் சென்ருர்.

சத்தியாக்கிரக இயக்கம் வலுத்து வருவதையும், அடக்குமுறை ஓங்கி நிற்பதையும் கண்டு, பாரதபூமி யனைத்தும் பார்டோலிக்குப் பக்கபலமாக நின்றது. தேசத்தின் நாலு பாகங்களிலிருந்தும், சத்தியாக்கிரக நிதிக்குப் பணம் வந்து குவிந்தது. இன்னும் பல இடங்களிலும் சத்தியாக்கிரக வரி கொடா இயக்கம்கொள்ள மக்கள் துடித்து நின்ருர்கள். வெகுஜனவாக்கு ஒருமுகமாக நின்றதுகண்டு, முடிவில் பம்பாய் அரசாங்கம் இணங்கிவர நேர்ந்தது. சத்தியாக்கிரக இயக்கம் நிற்கவேண்டுமாயின், சிறையில் போட்ட அனைவரையும் விடுவிக்கவேண்டும், பறிமுதல் ஆன நிலங்களைத் திரும்பக் கொடுக்கவேண்டும், பாரபட்சமற்ற கமிட்டியை நியமித்து வரி உயர்வை ஆராயவேண்டும், என்று வல்லபபாய் கேட்டார். அரசாங்கம் சரி என்றது. உடனே சத்தியாக்கிரகம் நிற்கலாயிற்று. அதுகண்டு தேசமக்கள் அனைவரும் ஆனந்தம் அடைந்தனர், பார்டோலி வாசிகளைப் பாராட்டினர்; வல்லபபாயை வாழ்த்தினர். அப்போது அவருக்கு ஸர்தார் எனும் பட்டம் வழங்கப்பட்டது. ஸர்தார் எனின், தலைவன் என்று பொருள்.

மதிப்பு மதிப்பு என்பர்; மதிப்பு என்பது யாது? நான்,யான் எனும் அகங்காரமே மதிப்பு என்று கருதப்படுகின்றது. மெய்யான மதிப்பு அஃது அன்று. பரந்த அறி

விலும், விரிந்த ஞானத்திலும், உயரிய செயலிலும் சீரிய சிந்தையிலுமே மெய்யான மதிப்பு உண்டு. அரசாளுவோர் என்றோ, மக்களின் தலைவன் என்றோ, பல தொழிலாள ரைக் கட்டிமேய்க்கும் முதலாளி என்றோ தருக்கி நிற்றல் மதிப்பு ஆகாது. யானைக்கும் அடிசறுக்கும் என்பது பழ மொழி. மானிடரிலே யாவரும் ஒரொரு சமயம் தவறத் தான் நேரும். தவறைத் தானே உணர்ந்துகொள்ளுதல் தலையாய ஞானம் ஆகும்; தானே உணராத சமயத்தில், பிறர் எடுத்துக்காட்டும் பொழுது உணர்ந்துகொள்ளுதல் மத்திமமாம். தானே உணருகையிலும், பிறர் எடுத்துக் காட்டுகையிலும், அதனை ஒப்புக்கொள்ளாமல், தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று சாதித்தல் மதிப்பு எனச் சிலர் கருதுவர். மனிதரிலே பிழை ஏதும் செய்யாத ஒருவனைக் காண்பது அரிதாம். அத்தகைய ஒருவன் இருப்பின், அவன் தேவன் ஆவான். மானிடன் ஆகான். எனவே மனிதர் என்போர் தவறிப்போதல் இயற்கையே. நம் தேசத்தைக் கட்டியாளும் அதிகார வர்க்கத்தினரும் மானிடரே. அன்னாரில் ஒருவரோ பலரோ தவறிவிடின், அதனை அவர்கள் ஒப்புக்கொள்வது அருமை. ஒப்புக் கொள்ளாமல், தவறையே சரியென்று சாதிப்பது பிரபலம். அவ்விதம் சாதிக்கவே, பார்டோலியில் அதிகார வர்க்கம் முயன்றது. அச்சாதிப்பைத் தகர்த்து எறிந்த இணையி லாக் கீர்த்திக்கு வல்லபபாய் நல்ல பாத்திரமானார். அது கண்டு பாரதபூமி அவரைப் போற்றிப் புகழத்தொடங் கிற்று. காந்தியின் கருணை நோக்கில் ஈடுபடும்வரையில், வல்லபபாயின் பெயர் காதவழிகூடத் தெரியாது. அந் நோக்கில் ஈடுபட்டு, பார்டோலியில் வெற்றிபெற்ற பின்னர், அவர் பெயரும் புகழும் கூர்ஜரநாட்டைக் கடந்து, நாற்றி சையும் பரிமளிக்கலாயிற்று. அஹிம்ஸையை அடிப்படை யாகக்கொண்டு முதலில் காந்திமகான் சத்தியப்போர்

தொடங்கிய காலையில்—அதாவது 1920-21-ஆம் ஆண்டில்—அதிகாரவர்க்கம் அவ்வளவாகத் தனது மிருகபலத்தைக் கையாளவில்லை. ஆதலின் மிருகபலத்தை ஆன்மபலம் வெல்லக்கூடும் எனும் உண்மை அந்நாள் நன்கு புலப்படவில்லை என்னலாம். 1928-ஆம் ஆண்டிலே பார்டோலியில் அதிகாரவர்க்கம் தனக்குள்ள மிருகபலம் அனைத்தையும் ஓரளவு கையாண்டு பார்த்தது. வில்வேதத்தில் நிகரிலாக் கீர்த்தி பெற்றுள்ள துரோணர் தமது திறத்தை அர்ச்சுனன் எனும் சீடன் மூலம் புலப்படுத்தியதேபோல், காந்தி மகான் தமது சீடன் வல்லபபாயின் மூலம் பார்டோலியில் அஹிம்ஸையின் அபார சக்தியை உலகறியச் செய்தார். எத்தகைய மிருகபலத்தையும் ஆன்ம பலங்கொண்டு தவிடுபொடி செய்து விடலாம் என்று காட்டிய படேலை நமது தமிழகம் காண விரும்பியது. ஆதலின் அவர் 1929-ஆம் ஆண்டு ஆகஸ்டு 31-ந் தேதி வேதாரண்யத்தில் நடைபெற்ற நம் மாகாண மகாநாட்டில் தலைமைவகிக்கலானார். அவ்விடத்தில் அமர்ந்து அவர் நிகழ்த்திய சொற்பொழிவை நம்மவர் மறந்திரார். மனப்பூர்வமான தியாகம் எனும் அடிகோலி, வருவது வருக எனும் துணிவாம் சுவர் எழுப்பினல் அன்றோ, சுதந்திரம் என்னும் மாளிகைநிருமிக்கலாம் என்பது அவர் சொற்பொழிவின் இறுதிவாக்கியம்.

12. குணதிசயம்

சர்தாரின் குணதிசயம் கூறும் தரமன்று. பாரிஸ்டர் பட்ட பெற்ற பரம வழக்கறிஞர் வல்லபபாய். அன்னிய ஆங்கிலபாஷை அவர் சொன்னபடி கேட்கும். எனினும் சென்ற 10-அல்லது 12-ஆண்டுகளாக அவர் ஆங்கில பாஷையில் பேசியதில்லை. விதியின்றி இரண்டொருசமயம் பேசினர் என்பர் சிலர். தாய்மொழியில் அவருக்குள்ள ஆர்வம் போற்றத்தக்கது. பாமரர் என்போருடன் பழகி

அன்னவருக்கு மெய்த்தொண்டு புரியவேண்டின், பர பாஷை பயன்படுமோ ? அடுக்களையில் ஆங்கிலம் பேசி ஆனந்தம் கொள்வோரும், அன்று பிறந்த குழந்தைக்கு ஆங்கிலமொழி எனும் பால் ஊட்ட ஆவல் அடைவோரும், வல்லபபாயின் நடையிலிருந்து பாடம் கொள்ளலாம்.

படாடோபத்திலும் டம்பத்திலும் ஒருசமயம் அவர் பட்டுழன்றும், அப்பாலோ மிக எளிய வாழ்க்கையை மேற் கொண்டார். தேசப்பணியில் முனைந்து நிற்கும் காலை யில், ஆகாரம் கொள்ளவும் சில சமயம் அவகாசம்நேராது. அவ்வேளை சிலர் களைத்துப்போவர். வல்லபபாயோ 'வாயு பட்சணம்' ஒன்றைத் தவிர ஏனைய ஆகாரம் எதுவும் உட் கொள்ளாமல் மூன்றுமாதம் காலங்கழிக்க முடியும் என்று கூறியிருக்கிறார். ஆதிகாலத்திலே துறவிகளில் பலர் வாயு ஒன்றையே ஆகாரமாகக்கொண்டு நீண்டகாலம் தவம் இயற்றி வந்ததாகப் புராணங்கள் கூறும்.

நேற்று இருந்த ஒருவன் இன்று இராது இறந்துபோ ஞன் எனும் பெருமை உடையது இவ்வுலகு என்றார் திரு வள்ளுவனார். ஆயினும் சிலரோ சாவு என்றால் திடுக்கிடு வர். நமது ஸர்தாரோ சாவை ஒருபொருட்டாக எண்ணு தவர். " சாவு என்பது நமக்கு ஒருமுறைதான் நேரும், இருமுறை நேராது ; பாட்சா என்றும் பக்கிரி என்றும் அது பார்க்காது. எனவே சாவுக்கு அஞ்சுவதேன் ?"

பார்த்தால் பசு, பாய்ந்தால் புலி என்பது ஒரு பழ மொழி. சத்தியாக்கிரகவீரர் பார்ப்பதற்குப் பசுப்போல் இருப்பர்; சத்தியப்போரில் இறங்கிவிடின், அறவழியில் புலிபோல் பாய்வர். முகம்மதிய வீர சிங்கமான மௌ லானு ஷௌகத் அலி என்பார் ஒரு சமயம், "மேலெங்கும் பனிமூடிய எரிமலை" என்று வல்லபபாயை வர்ணித்திருக் கிறார். கல்லுக்குக் கல் அண்டக்கொடுத்ததுபோல குத் திப் பேசுவதில் அவர் மிக வல்லவர். "அரசாங்கத்தார்

தண்ணீருக்கும் வரி போட்டிருக்கின்றனர், குளங்களிலும் ஏரிகளிலும் உள்ள தண்ணீருக்கும் நாம் வரி செலுத்தியாகவேண்டும். காற்று ஒன்றுக்குத்தான் அவர்கள் வரி போடவில்லை. காற்றுக்கும் வரி போட்டுவிடின், உடனே மூக்கை மூடிக்கொள்ளுங்கள் என்று உங்களுக்கு நான் சொல்வேன்." இங்ஙனம் அவர்பேசியது ஒருபுறம் இருக்க, "தேசியத் தலைவர்களை அரசாங்கம் சிறை செய்திருக்கையில் சிறைக்கு வெளியே உலாவுவோர் நடைபிணம் ஆவர், சுவைகலந்த உணவு கொள்வோர் மலத்தைத் தின்போர் ஆவர்; பஞ்சணையில் படுப்போர் பாடையில் கிடப்போர் ஆவர்", என்று கூறியிருப்பதைக் குறிப்பிடவேண்டும்.

மெய்த்தொண்டு புரியும் தேசியத் தலைவனுக்கு தேச மக்கள் அளிக்கும் கௌரவம் தேசத்தலைமையேயாம். அதற்கிணங்க, இந்த 1931-ஆம் ஆண்டு மார்ச்சுமாதம் கராச்சி நகரில் நடந்த காங்கிரஸ் மகா சபைக்கு அவர் அக்கிராசனர் ஆனார். வேளாண் மக்களின் நலத்திலே மகா சபைக்கு நாட்டம் உளது என்று அறிவிக்க, வேளாளர் தலைவனையே சபாநாயகமாகக் கொண்டனர்; கராச்சி காங்கிரசில் இளைஞரோ திருப்திகொள்ளவில்லை. அதனை யுணர்ந்த வல்லபபாய் தமது முடிவுரையில் வாலிபருக்குக் கூறியது:— காந்தி இர்வின் ஒப்பந்தம் என்னுகிறதென ஓர் ஆறு மாதகாலத்தில் புலப்பட்டுவிடும். நானும் காந்தியும் கிழவராகிவிட்டோம். அந்தஆறுமாதகாலம் நாங்கள்உயிர் தாங்கி இருக்கிறோமோ இல்லையோ? ஆயினும் நாங்கள் கண்மூடுமுன், சுயராஜ்ய சித்தியைக் காண ஆவல்கொண்டுளோம். ஆறுமாதகாலம் வாலிபர், பொறுத்திருப்பாராக ஒருநாள் இளைஞரின் கைக்குள் இம்மகாசபை அடங்கி நிற்கும்."

வந்தே மாதரம்!

இரண்டாம் பதிப்பு ஐயாயிரம் பிரதிகள். 5—11—31

Kesari Printing Works, Madras.

வந்தே மாதரம்! உ அல்லாஹூ அக்பர்!

"சுயராஜ்ய பேரிகை"

தேசீய ராஜீய சரித்திர நூல்வரிசை

அன்பர்காள்!

காங்கிரஸ் மகாசபை தோன்றி, 45-ஆண்டுகள் ஆகின்றன. அம் மகாசபை இன்றளவும் புரிந்துள்ள ஊழியம் அனந்தம். அச் சபையின் நோக்கும் போக்கும் நாட்டின் மூலை முடுக்குகளிலும் பரவுதல் வேண்டும். அன்றூடம் மக்களின் மனத்தை அலைக்கும் விஷயங்களோ பலவாம். பெரும்பாலர் அவற்றை நன்கறியச் சாதனங்கள் இல்லை. விஷய விவரங்களும் புள்ளிக்கணக்குகளும் கொண்ட துண்டுப் பிரசுரங்களும் சிறுநூல்களும் அவ்வப்போது வெளியாதல் வேண்டும்.

இக்கருத்தைக்கொண்டே "சுயராஜ்ய பேரிகை" எனப் படும் தேசீய ராஜீய சரித்திர நூல் வரிசை கிளம்பியுள்ளது. நாமார்க்கும் குடியல்லோம், நமனையஞ்சோம் என்று "சுயராஜ்ய பேரிகை" முழங்கா நிற்கும். அவ் வீரமுழக்கம் எட்டுத்திக்கும் சென்று தாக்கவேண்டும். இஃதே நமது பேராவலாம். அதற் காக "வீரவிஜயாலயம்" நிறுவியுள்ளோம். அந்த ஆலயத்தி லிருந்தே "சுயராஜ்ய பேரிகை"யின் நூல் வரிசைகள் தோன்றி வருகின்றன. நூல்கள் எல்லாம் இனியமொழியில், எளியநடை யால், மலிவான விலையில் உள்ளன.

"வீரவிஜயாலயம்" அன்னை பாரதியின் அலங்கார நிலய மாகவும், தேசத் தொண்டரின் ஞானத் தாயகமாகவும், விளங் கும் வண்ணம் முயன்று வருகின்றோம். "சுயராஜ்ய பேரி கையோ" தேசபக்தரின் அரிய ஊன்றுகோலாகவும் துலங்கி நிற்கும். சுயராஜ்ய பேரிகையின் மலர் ஒவ்வொன்றும் டபிள் கிரௌன் 32-பக்கங்கள் கொண்டு, அழகிய ஆப்டோன்படங்கள் தாங்கி வெளிவருகின்றன.

மாதந்தோறும் இரண்டு மலர்கள் (அவசியமாயின் 3 மலர் கள்) பிரசுரமாகும். ஒவ்வொன்றும் விலை ஓரணுவே. மலர்களின் அச்சும் அமைப்பும் அழகாக இருக்கும்; சொல்லும் பொருளும் ஊக்கம் ஊட்டும், உற்சாகம் அளிக்கும், உயர்வுகொடுக்கும், உள் ளத்தை உருக்கும், வீரம் புகட்டும், வீறுகாட்டும், அன்புபெருக் கும், அஹிம்ஸை பரப்பும், பக்தி பெருக்கும், பரவசம் உண்டாக் கும், அரிய அறிவும் கொடுக்கும், சீரிய ஞானமும் ஓங்கச் செய்யும்.

ஏஜண்டுகள் தேவை